AIA நிறுவனத்தால் 2021 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு காப்புறுதிக்காகவும் ரூ.100 இனை இலங்கை புற்று நோயாளர்கள் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க வாக்குறுதியளிக்கின்றோம்.

# AIA EASY PENSIONS

## டக் டிக் டுக் (Tak Tik Tuk) என மிகவும் இலகுவானது



AIA இன்ஷூவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

ஓய்வானது பொதுவாக அனைவருக்கும் கூடிய விரைவில் நிகழக்கூடியதொரு விடயமேயாகும். இருப்பினும் எம்மில் அதிகமானவர்கள் வாழ்க்கையின் பிந்திய காலத்தில் கூட இதைப்பற்றி அதிகமாகச் சிந்திப்பதில்லை. வாழ்க்கையில் சில கசப்பான அனுபவங்களைச் சந்தித்த பிறகே, தாங்களும் ஒரு காப்புறுதித் திட்டத்தை பெற்றிருந்திருக்கலாமே என சிந்திப்பார்கள். இங்கு உண்மை என்னவெனில், ஓய்வைப் பற்றிய திட்டமிடலை நாம் ஆரம்ப காலத்திலேயே மேற்கொள்வது சரிதானா என ஒருபோதும் சிந்திக்க வேண்டியதொரு அவசியமில்லை.

இவ்வுலகைச் சுற்றி வருவதற்கான உங்களுடைய கனவுப் பயணமாகவோ, அல்லது நீங்கள் ஓய்வு அடைந்த பின்னரான மிகவும் எளிய பாதுகாப்பானதொரு மாதாந்த வருமானமாகவோ, அல்லது நீங்கள் அனுபவித்த அதே வாழ்க்கை முறையை அப்படியே தொடர்ந்து கொண்டு செல்வதாகவோ, எதுவாக இருப்பினும், உங்களுடைய சேமிப்புக்களைத் தொடங்குவதற்கு இதுவே மிகச்சிறந்த தருணமாகும். ஒவ்வொரு மாதமும் சிறிய தொகையொன்றாகவிருப்பினும் நீங்கள் உடனடியாகவே உங்களுடைய சேமிப்பை ஆரம்பியுங்கள், இதனால் உங்களுடைய ஓய்வுக் காலம் மேலும் பாதுகாப்பானதாகவும், சிறப்பானதாகவும் இருக்கும்!

AIA Easy Pensions (AIA இலகு ஓய்வூதியம்) உடன், 3 மிக எளிய படிநிலைகளில் உங்களுடைய ஓய்வைத் திட்டமிடுங்கள்!
இது டக் டிக் டுக் (Tak Tik Tuk) என மிகவும் இலகுவானது!

## எனக்காக இதில் என்ன உள்ளது?

**முதிர்வின் போது மொத்தத் தொகையொன்று அல்லது மாதாந்த வருமானமொன்று: இது உங்களுடைய தெரிவு**

நீங்கள் உங்களுடைய முழு ஓய்வூதிய அனுகூலத்தையும் காப்புறுதியின் முதிர்வின் போதோ, அல்லது 5-30 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மாதாந்த ஓய்வூதியமாகவோ தெரிவு செய்து பெற முடியும்.

**உங்களுடைய சேமிப்புகளுக்கான மிகவும் கவர்ச்சிகரமான ஊக்குவிப்பு: எங்களுடைய விசுவாச வெகுமதி (Loyalty Reward)**

நீங்கள் உங்களுடைய கட்டுப்பணங்களை உரிய நேரத்தில் செலுத்தினால், 10வது, 15வது மற்றும் 20வது காப்புறுதி வருடத்தில் உங்களுடைய வருடாந்த அடிப்படைக் கட்டுப்பணத்தில் 900% வரையில் விசுவாச வெகுமதியொன்றை (Loyalty Reward) பெறுவீர்கள் (நீங்கள் தெரிவு செய்கின்ற கட்டுப்பண முறையிலேயே இது தங்கியிருக்கும்)

**நீங்கள் மரணமடைந்தால், உங்களுடைய குடும்பத்திற்கான ஆயுள் காப்புறுதி அனுகூலம்**

துரதிஷ்டவசமான உங்களுடைய மரணத்தின் போது, உங்களில் தங்கியிருப்போரின் கஷ்டமான பொருளாதார நிலைமையைப் போக்குவதற்காக, அவர்களுக்கு ஆயுள் அனுகூலம் வழங்கப்படும்.

**உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்திற்குமான விபத்து அனுகூலம்**

நீங்கள் விபத்தொன்றின் மூலமாக இறந்தாலோ அல்லது முழுமையாக அங்கவீனம் அடைந்தாலோ, இவ்விபத்து அனுகூலமானது உங்களுடைய குடும்பத்திற்கு மிகவும் உதவியானதாக இருக்கும்.

**உங்களால் கட்டுப்பணங்களை தொடர்ச்சியாகச் செலுத்துவதற்கு இயலாமல் போனால் கூட AIA உங்களுடைய ஓய்வூதியத்தைக் கட்டியெழுப்பும்.**

கட்டுப்பணச் செலுத்தும் காலத்தின் போது நீங்கள் மரணித்தாலோ அல்லது முழுமையான நிரந்தர அங்கவீனமடைந்தாலோ, கட்டுப்பணப் பாதுகாப்பு அனுகூலம் உங்கள் சார்பாக உங்களுடைய கட்டுப்பணங்களைச் செலுத்தி உங்களுடைய காப்புறுதியைத் தொடரும். நீங்கள் உங்களுடைய குடும்பத்திற்காக கட்டியெழுப்ப விரும்பிய ஓய்வூதிய நிதியிலிருந்தே அவர்கள் அனுகூலத்தைப் பெறுவார்கள்.

**அவசரத் தேவையொன்றின் போது மீளப்பெறக்கூடிய நெகிழ்வுத் தன்மை**

உங்களுடைய கட்டுப்பணக் காலத்தின் போது, ஒரு தடவை மீளப்பெறுகையாக, உங்களுடைய நிதியத்திலிருந்து 15% வரை மீள்பெற முடியும்.

**பென்சன்ஸ் பூஸ்டரால் வலுவூட்டப்பட்ட மாதாந்த ஓய்வூதியம்**

பென்சன்ஸ் பூஸ்டர் AIA Easy Pensions உடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மிகவும் தனித்துவமான சிறப்பம்சமாகும். நீங்கள் மாதாந்த ஓய்வூதியம் முறையை தெரிவு செய்தால் அறிவிக்கப்பட்ட வருடாந்த பங்குலாபத்துடன் மேலும் 30% பங்குலாப தொகையை வழங்கி உங்களின் ஓய்வூதியத்தை வலுப்படுத்தும். எவ்வித மேலதிக கட்டணங்களும் இன்றி இந்த மேலதிக வருமானத்தை நீங்கள் ஓய்வின் போது பெற்றுக் கொள்ள முடியும்.

## மேலதிக அனுகூலங்கள்

**வைத்தியசாலை அனுமதி அனுகூலம்**
நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது நாளாந்த கொடுப்பனவாக ரூ. 4000 உங்கள் நாளாந்த வருமானத்தை ஆவரணம் செய்யவதற்காக வழங்கப்படும்

**பாரதூரமான நோய்களுக்கான அனுகூலம்**
புற்றுநோய், இதயநோய், பக்கவாதம் மற்றும் சிறுநீரக செயலிழப்பு போன்ற 22 பாரதூரமான நோய்களில் இருந்து உங்களை நிதிரீதியாக பாதுகாக்க ரூ. 400,000 வரையான பாரதூரமான நோய்களுக்கான அனுகூலம்.

## உங்களுடைய ஓய்வூதியத்திற்கான 3 இலகுவான படிநிலைகள்

நீங்கள், டக் டிக் டுக் (Tak Tik Tuk) என மிகவும் இலகுவாக 3 படிநிலைகளில் காப்புறுதி ஒன்றைப் பெற முடியும்.

**படி 1: நீங்கள் விரும்புகின்ற பாதுகாப்புத் தொகையைத் தெரிவு செய்யுங்கள்**

AIA Easy Pensions (AIA இலகு ஓய்வூதியம்) 4 ஓய்வூதியப் பொதிகளில் ஒன்றின் தெரிவை உங்களுக்கு வழங்குகின்றது. நீங்கள் தெரிவு செய்கின்ற பொதியானது உங்களுடைய குடும்பம் நிதியியல் ரீதியில் பாதுகாப்பானதாக இருப்பதற்கு மிகப்பெரியளவில் சௌகரியத் தன்மையை உங்களுக்கு வழங்குவதோடு, ஆயுள் மற்றும் விபத்து பாதுகாப்பு அனுகூலங்களை உள்ளடக்குகின்றது:

| | மரணம் சம்பவிக்கும் சந்தர்ப்பத்தில் ஆயுள் அனுகூலம் | விபத்தொன்றின் காரணமாக மரணம் நிகழ்ந்தால் (ஆயுள் மற்றும் விபத்து அனுகூலம்) | விபத்தொன்றின் காரணமாக இயலாமை ஏற்பட்டால் |
|---|---|---|---|
| பொதி 1 | 450,000 | 1,125,000 | 675,000 (வரையில்) |
| பொதி 2 | 600,000 | 1,500,000 | 900,000 (வரையில்) |
| பொதி 3 | 750,000 | 1,875,000 | 1,125,000 (வரையில்) |
| பொதி 4 | 900,000 | 2,250,000 | 1,350,000 (வரையில்) |

(பெறுமதி இலங்கை ரூபாவில்)

**படி 2: (உங்களுடைய காப்புறுதிக் காலத்திற்காக) எவ்வளவு காலத்திற்கு நீங்கள் சேமிக்க வேண்டும் என்பதைத் தெரிவு செய்யுங்கள்.**

15, 20, 25 வருடங்களாகவோ அல்லது 30 வருடங்களாகவோ உங்களுடைய காப்புறுதிக் காலத்தைத் தெரிவு செய்யுங்கள். உங்களுடைய நிதியம் வளர்ச்சியடைவதற்கான காலமாகவே இது இருக்கும். உங்களுடைய பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

**படி 3: நீங்கள் ஓய்வடையும் போது உங்களுக்கு மொத்தமான தொகை ஒன்றா அல்லது மாதாந்த வருமானமா வேண்டும் என்பதைத் தெரிவு செய்யுங்கள்**

நீங்கள் உங்களுடைய ஓய்வூதிய அனுகூலத்தை மொத்தத் தொகையொன்றாகவோ அல்லது 05-30 வருடங்களுக்கான மாதாந்த ஓய்வூதியமாகவோ பெற முடியும்.

## எவ்வாறு உங்களுடைய சேமிப்பு வளர்ச்சியடைகின்றது?

உங்களுடைய சேமிப்புகள் மிகவும் கவனமாகவே தொழில்சார் நிதி முகாமையாளர்களினால் நிர்வகிக்கப்படுவதோடு, உங்களுடைய ஓய்வூதிய நிதியம் ஒவ்வொரு வருடமும் அதிகரிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் இவர்கள் உதவுவார்கள். உதாரணமாக, 2021ம் வருடம் உங்களுடைய வயது 35 வருடங்களாகவும், 55 வயதில் (20 வருடங்களின் காப்புறுதிக் காலம்) ஓய்வடையத் திட்டமிட்டு, பெக்கேஜ் 02 இனை நீங்கள் தெரிவு செய்தால், இங்கு வருடாந்தக் கட்டுப்பணமானது ரூபா. 32,322 ஆகவே இருக்கும். எனவே, உங்களுடைய 55 வயதில் நீங்கள் பெறக்கூடிய உத்தேச ஓய்வூதிய நிதியம் பின்வருமாறு அமையும்:

| நிதி விபரங்கள் | உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்கள் (பெறுமதி இலங்கை ரூபாவில்) | | |
|---|---|---|---|
| | வருடத்திற்கு 4% | வருடத்திற்கு 8% | வருடத்திற்கு 10% |
| ஓய்வூ பெறும் போது ஓய்வூதிய நிதியம் | 826,362 | 1,168,166 | 1,406,881 |

நீங்கள் 15 வருட காலத்திற்கு மாதாந்த ஓய்வூதியத்தை பெறுவதற்குத் தெரிவு செய்தால், மாதாந்த ஓய்வூதியம் உத்தேசமானது பின்வருமாறு அமையும்:

| பென்சன் பூஸ்டருடன பங்குலாப வீதங்கள் | வருடத்திற்கு 4% | வருடத்திற்கு 8% | வருடத்திற்கு 10% |
|---|---|---|---|
| பென்சன் பூஸ்டருடன் அனுமானிக்கப்பட்ட பங்குலாப விகிதம் (30%) | வருடத்திற்கு 5.2% | வருடத்திற்கு 10.4% | வருடத்திற்கு 13% |
| ஓய்வுபெறும் வயதில் | 4,591 | 6,490 | 7,816 |
| 5வது வருடத்தின் ஆரம்பத்தில் | 5,707 | 10,287 | 13,929 |
| 10வது வருடத்தின் ஆரம்பத்தில் | 7,095 | 16,305 | 24,823 |
| 15வது வருடத்தின் ஆரம்பத்தில் | 8,445 | 23,570 | 39,409 |
| **மொத்த ஓய்வூதியப் பெறுமதி** | **1,140,720** | **2,406,756** | **3,567,708** |

(பெறுமதி இலங்கை ரூபாவில்)

மேலுள்ள அட்டவணையின் உத்தேசப் பெறுமதிகளானது, 5.2%, 10.4% மற்றும் 13% உத்தேச பங்குலாப வீதங்களைப் பயன்படுத்திக் கணிக்கப்படுகின்றது. குறிப்பான கட்டணங்களின் பிரயோகித்தல் மற்றும் அனைத்துக் கட்டுப்பணங்களை உத்தேசித்தலானது உரிய கெடு திகதிகளிலேயே செலுத்தப்படுகின்றது.

மேலுள்ள உத்தேசப் பெறுமதிகளானது தெரிவு செய்கின்ற கட்டுப்பணக் கொடுப்பனவு முறையின் அடிப்படையில் மாற்றமடையும். உதாரணமாக, காலாண்டாக, அரையாண்டாக அல்லது மாதாந்தமாக

இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள பங்குலாப வீதங்களானது உத்தரவாதப்படுத்தப்படவில்லை மேலும் இவை நீங்கள் பெறக்கூடிய உயர்வான அல்லது தாழ்வான வரையறைகளாகவும் இருக்காது.

மேலே விளக்கப்பட்டுள்ள ஓய்வூதிய அனுகூலங்களுக்கு மேலதிகமாக உங்களுடைய பாதுகாப்பு அனுகூலங்கள் பின்வருமாறு அமையும்:

| உள்ளமைந்த அனுகூலங்கள் | தொகை (பெறுமதி இலங்கை ரூபாவில்) |
|---|---|
| மரணத்தின் போது செலுத்தக்கூடிய ஆயுள் அனுகூலம் (ஆயுள் மற்றும் அனுகூலம்) | 600,000 |
| விபத்தொன்றின் காரணமான மரணத்திற்கு செலுத்தக்கூடிய தொகை (ஆயுள் மற்றும் விபத்து அனுகூலம்) | 1,500,000 |
| ஆயுள் மற்றும் விபத்து அனுகூலம் | மரணம் சம்பவிக்கின்ற அல்லது பூரணமான நிரந்தர இயலாமை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் கட்டுப்பணங்களின் கொடுப்பனவு தள்ளுபடி செய்யப்படும். எவ்வாறாயினும் காப்புறுதிக் காலம் முழுவதும் காப்புறுதியானது அதனது அனுகூலங்களை வழங்குவதைத் தொடரும். |

## ஏனைய காப்புறுதித் திட்டத் தகவல்கள்

நுழைவு வயது: 19-61 வருடங்கள் (அடுத்த பிறந்த தினத்தில்)

அதிகபட்சமான முதிர்வு வயது: 76 வருடங்கள் (அடுத்த பிறந்த தினத்தில்)

### காப்புறுதிக் காலம்

காப்புறுதிக் காலம் 15, 20, 25 அல்லது 30 வருடங்கள்

### கட்டுப்பணக் கொடுப்பனவுக் காலம்

காப்புறுதிக் காலத்தையே ஒத்தது

**மீள் நிரப்பல்கள் (டொப்-அப்ஸ்)**
குறைந்தபட்சமான மீள் நிரப்பல் (டொப்-அப்): ரூபா. 5,000

## விசுவாச வெகுமதி (Loyalty Reward)

நீங்கள் தெரிவு செய்கின்ற கட்டுப்பணச் செலுத்தல் முறையிலேயே உங்களுடைய விசுவாச வெகுமதி (Loyalty Reward) தங்கியிருக்கும்:

| காப்புறுதி ஆண்டு | மாதாந்தம் | காலாண்டு | அரையாண்டு | வருடாந்தம் |
|---|---|---|---|---|
| 10 | 150% | 150% | 150% | 150% |
| 15 | 290% | 350% | 350% | 350% |
| 20 | 400% | 400% | 400% | 400% |

## ஏற்புடைய கட்டணங்கள்

கட்டுப்பணத்தின் ஒதுக்கீட்டுக் கட்டணம் (முதலீட்டு கணக்கின் ஒதுக்கீட்டுக்கு முன்னர் மொத்தக் கட்டுப்பணத்திலிருந்து கழிக்கப்படுகின்றது)

| காப்புறுதிக் காலம் | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 | 04வது ஆண்டு தொடக்கம் |
|---|---|---|---|---|
| மொத்தக் கட்டுப்பணத்தின் ஒதுக்கீட்டுக் கட்டணம் | 85% | 50% | 20% | 0% |
| மீள் நிரப்பல் (டொப்-அப்) கட்டுப்பணத்தின் ஒதுக்கீட்டுக் கட்டணம் | ஒவ்வொரு மீள் நிரப்பல் (டொப்-அப்) கட்டுப்பணத்தின் 0% | | | |

**கையளிப்பு அபராதம்**

| காப்புறுதி வருடம் | 1 வது | 2 வது | 3 வது | 4 வதிலிருந்து |
|---|---|---|---|---|
| அபராதம் | 100% | | | 4வது வருடத்திலிருந்து அபராதமானது காப்புறுதிக் காலம் முழுவதும் 100% இலிருந்து 0% க்கு குறைவடைகின்றது |

**நிர்வாகக் கட்டணம்:**
2019ம் வருடம் ரூபா. 287.50 ஆகவிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ம் திகதி ஆண்டிற்கு 15% இனால் அதிகரிக்கின்றது.

**நிதி முகாமைக் கட்டணம்:**
முதலீட்டுக் கணக்கின் மீதியில் வருடத்திற்கு 0.75%

**இடர் மற்றும் இதர பாதுகாப்புக் கட்டணம்:**
அடிப்படை மொத்த ஆயுள் காப்பீட்டுத் தொகையினதும் மற்றும் காப்பீட்டுக் கட்டண வீதத்தின் நிறுவனத்தினுடைய இடர் அடிப்படையிலும்.

**கட்டுப்பண முறைக் கட்டணம்:**
மொத்த கட்டுப்பணத்தில் 4% மாதாந்த முறைக்கு

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**
ஆயுள் காப்புறுதிதாரர் காப்புறுதி உரிமையாளர் அல்லாதவிடத்து, இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனுகூலங்கள் காப்புறுதி உரிமையாளருக்கே உரித்தாகும். எனினும், இவ்வனுகூலங்களுக்கான காப்பீடுகள் காப்புறுதிதாரருக்கானவை.

இத்திட்டமானது உரிமம் பெற்ற Financial Planning Executive அல்லது AIA Wealth Planner களிடமிருந்து மாத்திரமே பெற முடியும்.

இவ்வெளியீடானது காப்புறுதித் திட்டத்தின் ஒரு சாராம்சம் மட்டுமே ஆகும். முழுமையான காப்புறுதித் திட்ட விபரங்களுக்கும், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் தயவுசெய்து காப்புறுதி ஆவணத்தைப் பார்க்கவும்.

V9 - 06/22/21

HEALTHIER, LONGER,
BETTER LIVES

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இனால் வெளியிடப்பட்டது. 04/22/2021